முருகப்பெருமான் துணை

ஆசான் அரங்கமகா ஞானியர்க்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1378

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

08.07.2023, சனிக்கிழமை

1. ஞானபண்டிதன் என் மகா சூட்சுமமே
   ஞான சொரூப கலியுகத்தின் அவதாரமே
   வானவர்கள் வியக்கின்ற தர்மத்தை
   வாரிவழங்கி உலகை காக்கின்ற
2. காக்கின்ற மாதவசியே அரங்கனே
   கருணையே வடிவான கலியுகத்தின் ஞானியே
   ஆக்கமுடன் சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் அரங்கன் உமக்கு ஞான அறிவுரை ஆசி
3. ஆசிதனை சோபகிருது மிதுனத் திங்கள்
(சோபகிருது வருடம் ஆனி மாதம் 23 ம் நாள், 08.07.2023, சனிக்கிழமை)
   அரங்கன் உமக்கு பலம்கூட எடுத்துரைப்பேன்
   வாசிவென்ற உயர் ஞானிகளை
   வரம்தந்து கலியுகத்தில் உருவாக்க
4. ஆக்கமுடன் ஞானசேவை ஆற்றுகின்ற
   அரங்கன் நீயே கலியின் சிறந்த ஞானி
   தேக்கமின்றி உன் தொண்டு சிறக்க
   தென்முகனார் சுப்ரமணியர் யானும் இனிதே
5. இனிதே ஆக்கமுடன் இயங்கிவர
   இருந்து உன்னுள் அற்புதம் நடத்தி வர
   துணிவுபட உன் தொண்டில் நிலைத்து இருப்பவரெல்லாம்
   தேசிகனே கலியில் ஞானிகளாவது உறுதியப்பா
6. உறுதி தந்தேன் உன் மூலம் உலகமாற்றம்
   உன்னதமாய் ஞானிகள் ஆட்சி ஞான ஆட்சியாக
   ஆறுமுகன் யான் தலைமை ஏற்ற அற்புதமான
   ஆற்றல் நிறைந்ததொரு ஞான ஆட்சி

7. ஆட்சியதும் கலியுகத்தில் அரங்கேறும்
அரங்கன் உன் சக்தி மூலமாகத்தான் இது நிறைவேறும்
வரம்தந்தேன் இன்று அரங்கனுக்கு ஞானமாக
வழங்கிவிட்டேன் சக்தி கூட்டி இன்னும் வரமாக
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–